

மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று முன்தினம் (25.09.2024) சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் National Health Insurance Scheme (NHIS) மற்றும் நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் அனைவரும் இம்மருத்துவமனையில் இலவச சிகிச்சையினை பெறும் வகையில் Central Government Health Scheme (CGHS) திட்டத்தில் இணைக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, மண்டலக்குழுத்தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள், உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழில் பேட்டையில் அமைய உள்ள டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் கட்டுமானப் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 28ந் தேதி அடிக்கல் நாட்டுவதையொட்டி விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து சிப்காட் பகுதியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி. கிரண்ஸ்ருதி, தொழிலதிபர் ரமேஷ் , கழக சுற்றுச்சூழல் அணி மாநிலதுணை செயலாளர் ஆர். வினோத்காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நெமிலி ஒன்றியக் குழு தலைவர் வடிவேலு, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ரவீந்திரன், பெருமாள், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், ஜனார்த்தனன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். வினோத்,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சரவணகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணை அமைப்பாளர் . சிவா,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முரளி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானிவடிவேலு, ஒன்றிய பொருளாளர் பிரகாஷ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

## காஞ்சிபுரம் பவள விழா பொதுக்கூட்டத்தில்

# நாகை மாவட்டத்தில் இருந்து திரளாக கலந்து கொள்வீர்!

## செயற்குழுக் கூட்டத்தில் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை. செப்.27 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராசன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன், க. மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், துணைச் செயலாளர் ஆரூர் மணி வண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும் நிறைவேற்றப்பட்ட உள்ள தீர்மானங்கள் குறித்தும் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் சாகுல்ஹமீது, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், செல்வ. செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா.மலர் வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா. மீ.புகழேந்தி , எம்.ஆர்.செந்தில்குமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், உமாசெந்தாமரை, எம்.பாண்டியன், வேளாங்கண்ணி பேரூர் கழகச் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, அ.பாரிபாலன், இரா.முருகையன், எஸ். பால்ராஜ், ஆர்.சுரேந்தர், கே.எஸ்.சாகுல்ஹமீது, ஆர். ஆர். குலோத்துங்கன், மு.தினேஷ்குமார், பெ.முருகானந்தம், க.சத்தியமூர்த்தி, வி.கமல், கேஸ் வி.செந்தில், இளம்.சுந்தர், மாவட்ட இளைஞர் அணி துணைஅமைப்பாளர்கள் டேனியல் சத்தியா, சுரேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க நாகை மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் நியமனம் செய்யப்பட வேண்டிய கழக சார்பு அணி நிர்வாகிகள் பட்டியல் மற்றும் பாகம் ஒன்றிற்கு ஒரு தகவல் தொழில் நுட்ப அணிக்கு ஒரு ஒருங்கிணைப்பாளர் என்ற பட்டியல்களை இது வரை மாவட்ட கழகத்திடம் ஒப்படைக்காத ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உடனடியாக காலம் கடத்தாமல் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களை கேட்டுக் கொள்வது எனவும்,

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு சட்ட மன்ற தேர்தலை முன்னிட்டு தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க ஏற்கனவே ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் மாவட்ட கழகத்தின் மூலமாக ஓ.எம்.ஆர். படிவம் ஒப்படைக்கப்பட்டு அப்படிவங்களை பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் வலியுறுத்தியும்,

1949ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கி வைத்து 1967ல் தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பை ஏற்று அரும்பணியாற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்கு பிறகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பையும், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமை பொறுப்பையும் ஏற்று மக்களிடம் நன்மதிப்பை பெற்று ஐந்து முறை ஆட்சி பொறுப்பை ஏற்று மக்கள் நலத்திட்டங்களை தமிழ் நாட்டிற்கு தந்து, தமிழக முதல்வராகவும், 50 ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.க. தலைவராகவும் வழி நடத்தி சென்ற முத்தமிழ் கலைஞர் அவர்கள் மறைவுக்கு பிறகு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் தளபதி அவர்கள் முறைப்படி கழகத்தின் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் நடந்துள்ள அனைத்து பொதுத்தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடி தமிழக முதல்வராகப் பதவியேற்று தமிழ்நாட்டு மக்களின் எண்ணங்களை வண்ணமயமான திட்டங்கள் செயல்படுத்தி சிறப்பான நல்லாட்சி நடத்தி வருவதுன் தி.மு.க. தலைவராக திறம்பட செயலாற்றி வரும் நமது கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் மக்கள் பணி செய்யும் நமது திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வயது 75.

இவ்வாறு தி.மு.க. எனும் அரசியல் பேரியக்கத்திற்கு பவளவிழா விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் நாளை 28.9.2024 சனிக்கிழமை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் நமது கழகத் தலைவர் தளபதி அவர்கள் பவள விழா பேருரையாற்ற உள்ளார்கள். இந்த பவள விழா பொதுக்கூட்டத்தில் நாகை மாவட்டத்தில் இருந்து கழகத்தினர் பெரும் அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்றும், ஒற்றை செங்கல்லால் பா.ஜ.க.வை கதிகலங்க செய்த, தமிழகம் முழுவதும் கழக நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள், கழகத்தினர் குடும்ப நிகழ்ச்சிகள் தேர்தல் பணிகள் என அனைத்து பணிகளையும் சூறாவளி சுற்றுப் பயணம் மூலம் கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றி கொண்டு இருக்கும் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு ஒட்டு மொத்த கழகத்தினர் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் துணை முதல்வர் பொறுப்பு வழங்கிட கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களை கேட்டுக் கொள்வது என்றும்,

தலைமைக் கழக அறிவுறுத்தலின் படி நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் பொது உறுப்பினர்கள் கூட்டங்களை நடத்தப்பட்டு பின் ஒன்றிய, நகர, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்திட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள் அனைவருக்கும் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


## நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு

# ஒன்றிய, நகர, பேரூர் அளவிலான அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கும் விவரம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் அறிவிப்பு!



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்களின் அறிவுறுத்தலின்படி நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் அளவிலான அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள், பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழக தோழர்கள் கீழ்க்கண்ட விதிமுறைகள் படி விண்ணப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு நிறைவுசெய்தவர்களாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் பகுதியின் வாக்காளர்களாக இருந்தல் வேண்டும்.
3. ஒரு அமைப்பாளர், ஐந்து துணைஅமைப்பாளர்கள் (பெண்உட்பட) நியமிக்கப் படும்.
4. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR Code மூலம்பொறியாளர் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்கவேண்டும்.
5. மண்டல அளவில் விண்ணப்பதாரர்களை அழைத்து நேர்காணல் செய்துதேர்வு செய்யப்படும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நமது ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணியின் நிர்வாகிகள் புதிய நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்களை இணைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.எம்.மதுரா செந்தில்**

செயலாளர், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.


## தி.மு.க. பவள விழா பொதுக்கூட்டத்தில்

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வேண்டுகோள்!

நாமக்கல், செப்.27-

தி.முக பவள விழாவை முன்னிட்டு நாளை (28.09.2024-சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிகட்சி தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பவள விழா பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.



இக்கூட்டத்தில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளார். அதுசமயம், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், பாகமுகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய அரபு அமீரகத்தில்

# பாஸ்போர்ட் இல்லாமல் தவிக்கும் இந்தியர்களை மீட்க நடவடிக்கை!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, செப்.27-

ஐக்கிய அரபு அமீரகத்தில் பாஸ்போர்ட் இல்லாமல் தவிக்கும் இந்தியர்களை மீட்க உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.



தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் எஸ்.எஸ். மீரான், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமிக்கு ஒரு மனுவினை சமர்ப்பித்துள்ளார். அம்மனுவில் ஐக்கிய அரபு அமீரக அரசு அந்நாட்டில் பாஸ்போர்ட் உள்ளிட்ட ஆவணங்களை இழந்து தவிக்கும் வெளிநாட்டினர் 01.09.2024 முதல் 30.10.2024 க்குள் எந்த வித தண்டனையோ அல்லது அபராதமோ இன்றி தங்கள் ஆவணங்களை புதுப்பித்துக் கொள்ளலாம் அல்லது தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆவணங்களை இழந்து தங்கியுள்ளவர்களை நம் நாட்டிற்கு மீட்டுக் கொண்டு வருவதற்கு உதவி செய்யும்படி கோரியுள்ளனர். இம்மனுவினை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்த டாக்டர் கலாநிதி வீராசாமி இதுகுறித்து ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சர் எஸ். ஜெயசங்கர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது :

ஐக்கிய அரபு அமீரக அரசு அந்நாட்டில் பாஸ்போர்ட் விசா முதலான ஆவணங்கள் இன்றி அங்கு தங்கியுள்ள வெளிநாட்டினர் 01.03.2024 முதல் 30.10.2024 க்குள் எந்த வித தண்டனையோ அல்லது அபராதமோ இன்றி தங்கள் ஆவணங்களை புதுப்பித்துக் கொள்ளலாம் அல்லது தங்கள் நாட்டிற்கு திரும்பி செல்லலாம் என்று ஒரு பொது மன்னிப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது குறித்து தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் எஸ். எஸ். மீரான் என்பவர் என்னிடம் வழங்கியுள்ள மனுவிலுள்ள கோரிக்கையை தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

அம்மனுவில் அவர் இந்திய நாட்டு குடிமக்கள் சுமார் 15000 பேர் தங்களது ஆவணங்களை இழந்து நம் நாட்டிற்கு திரும்பி வர இயலாமல் அங்கிருந்து திரும்பி வருவதற்கு விமான கட்டணம் செலுத்தவும் வழி இன்றி தவித்து வருவதாகவும் அவர்களை இந்திய அரசு இந்திய தூதரக அதிகாரிகள் மூலம் மீட்டெடுத்து, அவர்கள் திரும்பி வருவதற்கான விமானப் பயண கட்டணத்தையும் ஏற்றுக் கொண்டு நம் நாட்டிற்கு அழைத்து வர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகம் செய்துள்ள இந்த அறிவிப்பு அங்கு சிக்கிக் கொண்டுள்ள நமது குடிமக்களை மீட்டு வருவதற்குக் கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பாகும். இது போன்ற அந்த அரசு 2018 ஆம் ஆண்டில் வழங்கி இருந்த பொது மன்னிப்பு அறிவிப்பைத் தொடர்ந்து சுமார் 15000 இந்தியக் குடிமக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த அறிவிப்பிற்குப் பிறகு கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டிருந்த 2020-22 ஆண்டுகளில் அங்கு பணியாற்றிக் கொண்டு வந்த இந்தியக் குடிமக்கள் பலர் தாங்கள் செய்து வந்த வேலையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்கள் நமது நாட்டிற்குத் திரும்பி வரத் தேவையான பாஸ்போர்ட்டை இழந்தோ அல்லது அங்குப் பணியாற்றுவதற்குத் தேவையான விசாக் காலம் முடிந்து விட்டதாலோ அங்கேயே சிறு சிறு எடுபிடி வேலைகள் செய்து போதிய வருவாய் இன்றித் தவித்து வருகின்றனர்.

ஐக்கிய அரபு அமீரக அரசு இதுபோன்ற தவிக்கும் வெளிநாட்டினரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகமும் இது போன்ற மக்களுக்கு உதவிகள் செய்திட முகாம்கள் அமைத்துள்ளது. ஏறத்தாழ 500 முதல் 1000 தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய தமிழ் குடிமக்கள் உள்ளிட்ட சுமார் 15000 இந்தியர்கள் அங்கு தக்க ஆவணங்களின்றி தங்கி இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்தி அந்நாட்டில் தக்க ஆவணங்கள் இன்றி சிக்கித் தவிக்கும் இந்தியக் குடிமக்களை மீட்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்களை மீட்டு வருவதற்குத் தேவையான விமானக் கட்டணம் உள்ளிட்ட செலவுகளை ஒன்றிய அரசு ஏற்றுக் கொண்டு நமது குடிமக்களை நமது நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக் கொள் கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர்.கலாநிதி வீராசாமி கூறியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர்,சமூக நீதி காவலர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மணியார்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த 52 நபர்களுக்கு, வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. வன உரிமை சான்றிதழ் வழங்கினார், இதில் ஒன்றியக் குழு பெருந்தலைவர் சந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட பலர் உடன் உள்ளனர்.